எப்போது சுயமாக கண்காணித்தல், சுயமாக-தனிமைப்படுத்துதல் அல்லது குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புதல் எனப்தைத் தெரிந்துகொள்ளுங்கள்

பெற்றோர்களுக்கு தங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க என்ன செய்யவேண்டும் மற்றும் கோவிட்-19 குறித்த கேள்விகளும் இருக்கும். கீழே உள்ள சில சாத்தியமான நிலைகளின் உதாரணங்கள் பெற்றோர்களுக்கு வழிகாட்ட உதவும்.

இவ்வாறு இருந்தால்...



ஜூலியாவுக்கு கோவிட்-19 அறிகுறிகள் உள்ளது :

- ஜூலியா வீட்டில் தங்கி, சுயமாக-தனிமைப்படுத்திக்கொண்டு, பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
- பள்ளி வளாகத்திற்குச் செல்லும் ஜூலியாவின் உடன் பிறந்தவர்கள் மற்றும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களும் கோவிட்-19 இல்லை என்று கண்டறியப்படும்வரை வீட்டிலேயே தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.
- ஜூலியாவின் பரிசோதனையில் கோவிட் இல்லை என்று தெரிந்தவுடன் மற்றும் குறைந்தது 24 மணிநேரத்திற்கு அறிகுறிகள் இல்லாமல் இருந்தபோதும் அவர் பள்ளிக்குத் திரும்பலாம்.
- பள்ளி வளாகத்திற்குச் செல்லும் ஜூலியாவின் உடன் பிறந்தவர்கள் மற்றும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களும், ஜூலியாவின் பரிசோதனைகள் நெகட்டிவ் என்று வந்தவுடன் பள்ளிக்குத் திரும்பலாம்.



அபிஷோலாவுக்கு அறிகுறிகள் கண்டறியப்பட்டு, கோவிட்-19 உள்ளது என்று உறுதி செய்யப்பட்டது:

- அபிஷோலா தனது அறிகுறிகள் தொடங்கையா நாள் முதல் 10 நாட்களுக்கு வீட்டில் தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.
- அபிஷோலாவின் வீட்டில் உள்ள அனைவரும் வீட்டிலேயே தங்கி, குறைந்தது 14 நாட்களுக்கு சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.
- பெற்றோர்கள் பாசிடிவ் பரிசோதனை முடிவை பள்ளிக்குத் தெரிவிக்கவேண்டும். பள்ளி முதல்வர் அபிஷோலாவின் வகுப்பை டிஸ்மிஸ் செய்வார். மேலும் அறிவுறுத்தலுக்கு பொது சுகாதார துறை அவரது குடும்பத்தைத் தொடர்பு கொள்ளும்.

பாஓ-லீ க்கு கோவிட்-19 அறிகுறிகள் உள்ளது, ஆனால் பரிசோதனைக்குச் செல்லவில்லை.

- பாஓ-லீ தனது அறிகுறிகள் தொடங்கையா நாள் முதல் 10 நாட்களுக்கு வீட்டில் தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.
- பள்ளி வளாகத்திற்குச் செல்லும் பாஓ-லீ இன் உடன் பிறந்தவர்கள் மற்றும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களும் 14 நாட்களுக்கு வீட்டில் தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவும்.
- 10 நாட்களுக்கு பிறகு, அவரது அறிகுறிகள் குணமடைந்தவுடன் பாஓ-லீ மீண்டும் பள்ளிக்குச் செல்லலாம்.
- பள்ளி வளாகத்திற்குச் செல்லும் வீட்டில் உள்ள பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அறிகுறிகள் இல்லையென்றால், 14 நாட்களுக்கு பிறகு மீண்டும் பள்ளிக்குத் திரும்பலாம்.

பிப்ரவரி 24, 2021

Tamil →

எப்போது சுயமாக கண்காணித்தல், சுயமாக-தனிமைப்படுத்துதல் அல்லது குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புதல் எனப்தைத் தெரிந்துகொள்ளுங்கள்

அப்துல், கோவிட்-19 உள்ளவருடன் நெருக்கமான தொடர்பில் இருந்தார்:

- அப்துல் வீட்டில் தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொண்டு, பொது ஆரோக்கிய அறிவுரையை பின்பற்றவேண்டும்.
- அப்துலின் உடன் பிறந்தவர்கள் அப்துலின் 14 நாட்கள் சுய தனிப்படுத்தல் காலம் வரை வீட்டிலேயே இருக்கவேண்டும்.
- வீட்டில் உலா பெரியவர்களுக்கு அறிகுறிகள் எதுவும் இல்லையென்றால் அவர்கள் பள்ளிக்கோ அல்லது பணிக்கோ செல்லலாம்.
- அப்துலுக்கு அறிகுறிகள் ஏதேனும் தோன்றினால், வீட்டில் உள்ள மற்ற அனைவரும் கட்டாயம் வீட்டில் தங்கி சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்துல் பரிசோதனைக்குச் செல்லவேண்டும்.
- அப்துல் பரிசோதனையில் நெகட்டிவ் என்று வந்தால், அவரது உடன் பிறப்புகள் அப்துலின் தனிப்படுத்தல் காலம் அவரை வீட்டிலேயே இருக்கவேண்டும். வீட்டில் உள்ள அனைத்து பெரியவர்களுக்கு அறிகுறிகள் எதுவும் இல்லாத நிலையில் பள்ளி/பணிக்கு திரும்பலாம். அப்துல் நெகட்டிவ் என்று வந்தாலும், அந்த காலம் முழுவதிலும் அறிகுறிகள் தோன்றக்கூடும் என்பதால், பள்ளிக்குத் திரும்பும் வரை 14 நாட்கள் சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பெர்டாவின் தாய் கோவிட்-19 தொற்று உள்ளவர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தார்:

- பெர்டாவின் தாய் 14 நாட்களுக்கு வீட்டிலேயே தங்கி, சுயமாக தனிமைப்படுத்திக்கொண்டு, பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும்.
- பெர்டா மற்றும் அவரது உடன் பிறந்தவர்கள் அவளது தாயின் 14 நாள் தனிமைப்படுத்தல் காலம் முடியும்வரை வீட்டிலேயே இருக்கவேண்டும்.
- பெர்டாவின் தாய் தனிமைப்படுத்தலின்போது கோவிட்-19 அறிகுறிகள் தோன்றினால், வீட்டில் உள்ள அனைவரும் அவரது தாயின் பரிசோதனையில் கோவிட்-19 இல்லை என்று தெரியும்வரை தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஜாக்சனின் தந்தை கடந்த 14 நாட்களில் கனடாவிற்கு வெளியில் பயணித்துள்ளார்:

- ஜாக்சனின் தந்தை வீட்டில் 14 நாட்களுக்கு வீட்டில் தங்கி சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும், குறிப்பாக வீட்டில் உள்ளவர்களிடமிருந்து தனியாக தனி அறையில் இருக்கவேண்டும்.
- ஜாக்சன் மற்றும் அவரது உடன் பிறந்தவர்கள் மற்றும் பெரியவர்கள் 14 நாட்கள் பயண தனிமைப்படுத்தல் காலம் முழுவதிலும் வீட்டிலேயே தங்க வேண்டும்.
- ஜாக்சனின் தந்தைக்கு அறிகுறிகள் ஏதேனும் தோன்றினால், அவர் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.
- ஜாக்சனின் தந்தை கோவிட்-19 இருப்பதாக உடுகி செய்யப்பட்டால், ஜாக்சன் மற்றும் வீட்டில் உள்ள அனைவரும் 14 நாட்களுக்கு வீட்டிலேயே இருந்து தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.